	Sons of Confusion. Two classes. Sânkyam & Yogam.	Ch. I. The Picture-lamp
	பலவாகுமானால், வாதிகள் எல்லாம் சீவேசுர வி	
	ஷயத்திலே வாதம் பண்ணி மாயாகாரியம் ஏதெ	
	ன்கின்றீர்.................................. சங்கைக்கு..	
உத்.	அவர்களைப் பிடித்த அக்கிஞானகாரண	
	மாக, வீணிலே மாய்கிறார்கள்.......... உத்தரம்	
சங்.	நீ சொன்னதா இருக்க இந்த வாதிகளெ	
	ல்லைப் போகலாமோ? இந்தத் தத்துவத்தைப் போ	
	தியும் என்கின்றீர்......................... சங்கைக்கு	
உத்.	பிராந்தர்களுக்குப் பக்குவம் வாராதத	
	ற்கு முன்னே போதித்தால் இவைப்பு மாத்திர	
	மே மிச்சம் அல்லாமல் அவன் புத்தியிலே ஏ	
	றாது...................................... உத்தரம்.	
சங்.	ஏந்த வாதிகள் எதிலே பிராந்தர்	
	களாயிருக்கிறார்கள் என்கின்றீர்...... சங்கைக்கு	
உத்.	லோகாயுதன் முதல் சாலுகியன் பரி	Lokâyuthan.
	யந்தம் தேகப் பிராந்தியிலே அகப்பட்ட பேர்கள்.	लौकायतं The atheistical Philos.
	யோகமுதல் விகுட சாச்சன பரியந்தம் சீவ	योग
	ப் பிராந்தியிலே அகப்பட்ட பேர்கள்...... உத்தரம்	
சங்.	பெரியவர்களாயிருக்கின்ற சாஸ்தி	
	ரக் கர்த்தாக்களையும் பிராந்தர்களென்று சொல்ல	
	ப் போமோ, என்கின்றீர்................ சங்கைக்கு	
உத்.	அத்துவிதப் பிரமத்தை அறியாத	अद्वैतं Unity
	படியினால் இவர்கள் பிராந்தர்களே. இவர்க	
	ளுக்கு இகபரம் இரண்டும் இல்லை........ உ. உத்.	

	The two sects Sāṅkhya & Yōga.	Ch. I. The picture-lamp.
சங்.	ஜீவவாதிகளுடனே ஈசுரவாதிகளையு ம் பிராந்தர்கள் என்று சொல்லலாமோ என்கி ன்ற .... சங்கைக்கு.	
உத்.	சொற்பனத்திலே, பிட்சையெடுக்கி ன்றவனும் இராசாவாக இருக்கின்றவன் அதிகமானவனும், விழித்தபின் இரண்டு சொற் பனமும் பொய்யாய்ப் போம், என்பது போல இ ந்த இருவகை வாதிகளும் தூபித்தத்திலே தார தன்மியம் ஆனாலும், ஞானம் வந்தவர்க்குத்தி ந்து, இரண்டு வகை வாதிகளும் பிராந்தர் கள் தானே .... என்றுத்தரம்.	
சங்	மோட்சம் வரவேணும் என்கின்றவ னும் இந்த வாதங்களை விசாரிக்கத் தேவை யில்லையோ, என்கின்ற.................... சங்கைக்கு.	
உத்.	பூர்வபட்சமாக விசாரித்து, தள் ளிவிடுகின்றதே அல்லாமல் சித்தாந்தமாய் விசாரிக்க வேண்டியது வேதாந்தம்...... எ. உத்.	
சங்.	சாங்கியம், யோகம், இந்த இருவகை யும். சொன்ன ஜீவனும், ஈசுரனும் சைத ன்னியம் ஆனபடியினாலே இந்த இருவகை யும் தள்ளப்படாது, வேதாந்தத்தில் கூட லாம் என்கின்ற.................... சங்கைக்கு.	साङ्ख्य a philosophy
உத்.	ஜீவ ஈசுரர்களுக்குப் பேதம், சித்தம் ஆனபடியினால் நம்முடைய சித்தாந்தத்தி	भेद difference.

Ch. I. The picture lamp.

றங்குக்கிடாது .... என்றுத்தரம்.

சிஷ. உம்முடைய சித்தாந்தத்திலே தொ
ம்பதத்திற்கும், தற்பதத்திற்கும், அர்த்த
பேதம் இல்லையோ என்கின்ற..... சங்கைக்கு.

உத். அத்துவிதத்தைப் போதிக்கவேணும் என்கின்
றதற்காக வெவ்வேறாய்ப் பிரித்துக் காட்டினதே அல்
லாமல் அர்த்தபேதம் இல்லை..................என்பதுத்தரம்.

சிஷ. இப்படியானால் லட்சணையினால் பதார்
த்த சோதனை பண்ணுவானேன். என்கிற..... சங்.

உத். அஞ்ஞானத்தினால் ஜீவ ஈசுவரர்களை வேறு
க்கண்டிருந்த பிராந்தர்களுக்குப் பிராந்தியைப்
போக்கவேண்டிப் பதார்த்த சோதனைப் பண்ணிக்காட்டுகின்றதென்றுத்தரம்

पदार्थ The meaning of a word.

சிஷ. பதார்த்த சோதனையினால் இருவரையும் ஒன்றாய்க் காண்கின்றது எப்படி என்கின்
ற..................................சங்கைக்கு.

உத். உபாதி நிமித்தமாயிருக்கின்ற ஜலாகா
சத்தையும், மேகாகாசத்தையும் விட்டு இவைக
ட்கு அதிஷ்டானமாயிருக்கின்ற கடாகாச
த்தையும் மகாகாசத்தையும் ஒன்றென்று கா
ண்பது போல்த் தொம்பதத் தற்பதங்களிலும்.
உபாதி நிமித்தமான ஜீவேசுவரத்தன்மை, இவர்க
ளுக்கு அதிஷ்டானமான கூடஸ்தனையும் பிர
மத்தையும் ஒன்றாய்க் காண்கின்ற லட்சணை
யினால் பதார்த்தம் சோதிக்கின்றது...... எ.உத்.

Qu. What is there in the Sânkhya & Yoga philosophies contrary (to the Vêdânt)?
Ans. The doctrines that there are many souls, that the world is real, and that there is one Ishwaran are contrary to the principle of unity.—

Qu. Though they do not agree with the doctrine of unity, what matter? Can they not obtain liberation thro' the belief in life as being ~~unmoved~~ unconnected spirit?
Ans. Because the world & Ishwaran are eternal, tho' they know themselves to be the unconnected one, yet as before, delusion will assail them. And then Ishwaran who is still existant, will punish.— Therefore how can liberation be?

	The Sānkhya & Yoga Philosophies compared with the Vēdant.	Ch. I. The picture lamp.
சங்	இந்தப்படிக்கு சாங்கியமதத்தில் ஜீவனையும் யோகமதத்தில் ஈசுரனையும் இரண்டுபதத்திற்கும் அர்த்தமாக்கிலாபோனனென்கின்ற.... சங்கைக்கு.	
உத்	இப்படியானால் வேதவிரோதிகளாயிருக்கின்ற லோகாயுதன் பரியந்தங் கூட்டலாம்.......................... என்னுத்தரம்.	
சங்	அப்படி சாங்கியயோகமதத்திலே விரோதமேதென்கின்ற......... சங்கைக்கு.	The Sānkhya.
உத்.	ஆத்மா அநேகம் என்றதும் ஜகத்து சத்தியம் என்றதும் ஈசுரன் வேறெவன் உண்டு என்றதும் அத்துவிதத்திற்கு விரோதம்.......................... என்னுத்தரம்.	
சங்	அத்துவிதத்திற்கு ஒத்துவராவிட்டாலென்ன, ஜீவன் அசங்க சைதன்னியம் என்று அறிந்துகொண்டு முத்தியில்லையோ என்கின்ற........... சங்கைக்கு.	
உத்.	சொத்துரூபம் ஈசுவரம் நித்தியம் என்று தன்னிற்றான் அசங்கன் என்று அறிந்தாலும் முன்போலே பிரகிருதியும் நித்தியமாக்கிடும் பின்பு இருக்கின்ற ஈசுரனும் சிட்டைபண்ணுவான் ஆகையினால் மோட்சம் எப்படியாகும்..... என்னுத்தரம்.	
சங்.	அசங்கனாக இருக்கின்ற ஆத்மாவுக்கு அவிவேகத்தினால் பிரகிருதி சங்கம் வந்தது விவேகம் வந்தபிறபாடு இவனை எப்படித் தொடும் என்கின்ற.............................. சங்கைக்கு.	

		Ch. I The picture lamp.
உத்.	இப்படி ஆனால் உன்னுடைய சித்தாந்தம் கெட்டு மாயாவாதத்திலே வேதாந்தத்திலே வந்தாய .... என்றுத்தரம்.	
சங்.	உம்முடைய அத்துவிதத்துக்கு ஆத்மாக்கள் நானாவிதம் ஆகாதபோது இவன் முத்தன் இவன் பெத்தன் என்கின்ற நிணையம் எப்படி வந்தது என்கின்ற..... சங்.	
உத்.	இந்த நிணையம் எல்லாம் அஞ்ஞ மாயையத்தாலே கற்பிக்கும் .... என்றுத்தரம்.	
சங்.	ஆத்மாவென்றேறிய இரண்டு இல்லாத இடத்திலே மாயை எப்படி விகற்பத்தைக் கற்பிக்கும் என்கின்ற.................. சங்கைக்கு.	विकल्पः Error.
உத்.	கூடாததைக் கூட்டிவிக்கின்றதே மாயைக்கு ஸ்வபாவம் ஆகையினாலே சகலத்தையும் கற்பிக்கும். ஸ்வபாவத்திலே பெத்தம் முத்தி, பெத்தன் முத்தன் இல்லை என்று வேதம் சொல்லுகிறது.................. என்றுத்தரம்.	
சங்.	இதுவெல்லாம் ஸ்வபாவத்திலே இல்லாவிட்டால் பின்னை எப்படி உண்டாம் என்கின்றதே.................................. சங்கைக்கு.	
உத்.	மாயையாகின்ற காமதேனுவிற்கு ஜீவ ஈசுரன் என்று இரண்டு கன்று உண்டு. வேண்டியபடி அவிப்பாலும் கறக்கும் ஆகையினால் அத்துவிதம்யென்றேறிய இரண்டு இல்லை.......................... என்றுத்தரம்.	

	The Conduct of the Gnâni.	Ch. I. The picture lamp.
சிஷ்.	இப்படிப் பேதமெல்லாம் மித்தை என்று அறிந்து பரமாத்மாவே இவரே உள்ள பொருள் என்று அறிந்திருக்கின்ற ஞானிகளும் விவகாரம் பண்ணக் கண்டோம், அது கூடுமோ என்கின்ற..........................சங்கைக்கு.	
உத்.	முன்போல் பரமார்த்தமாக விவகாரம் பண்ணாமல் மித்தை என்று காண்பார்கள்..............................என்றுத்தரம்.	
சிஷ்.	அஞ்ஞானி எப்படி விவகரிப்பன், ஞானி எப்படி விவகரிப்பன் என்கின்ற......சங்:	
உத்.	இந்த வியாபாரங்கள் எல்லாம் உண்மை என்றும் அத்துவிதம் இல்லை என்றும் விவகரிப்பன் அஞ்ஞானி. அத்துவிதமாத்திரம், உண்மைப்பொருள் மற்றுள்ள எல்லாம் மித்தை என்று கண்டு விவகரிப்பன் ஞானி. அந்த நிண்ணயப்படிக்குப் பலனும் வரும்..........................என்றுத்தரம்.	
சிஷ்.	அத்துவிதம் பிரத்தியட்சமாமோ என்கின்ற..........................சங்கைக்கு.	
உத்.	நீ ஞானசட்சுவாயிருக்கின்றையோ இல்லையோ..........................என்றுத்தரம்.	
சிஷ்.	உள்ளபடி தோற்ற இல்லை என்கின்ற..........................சங்கைக்கு.	
உத்.	அத்துவிதத்திலேயும் சரியல்லோ, துவிதம் சித்திக்கின்றபடிக்கு அத்துவிதமும்	

Qu. If at any other time the doctrine of Duality should appear true?
Ans^r. The doctrine of unity must again.

Ans: The Egotist that says "to me" suffers there but not the witness ourselves: — This must be known.

Ch. I. The picture lamp.

சித்திக்கும் .... என்பதுத்தரம். —

சங். த்விதம் அழிந்தல்லோ அத்துவிதம் சித்திக்கவேணும் என்கின்ற .... சங்கைக்கு

உத். த்விதம் இருக்கையிலே த்வைதத்தைக் காணுகின்ற அறிவாகத்தானே அத்துவிதம் சித்திக்கும் .... என்பதுத்தரம்.

சங். ஞானம் வந்தும் இராணுமே நீக்கினதா யோ என்கின்ற .... சங்கைக்கு.

உத். அவத்தை அறிந்தும் சாட்சிமாத்திரமாக இருக்கின்றபடியினாலே த்விதம் மாயாமயம், அத்துவிதம் நித்தியம் .... என்பதுத்தரம்.

சங். மறையும் ஒருவேளையில் த்விதம் சத்தியமாய்த் தோணுகிறதில்லெப்படி என்கின்றதை ...... சங்.

உத். நித்தமும் அத்துவிதத்தைப் பரிசீலனம் பண்ண .... என்பதுத்தரம். शीलनं Careful study

சங். எத்தனைகாலம் பரிசீலனம் பண்ணவேணும் என்கின்ற .... சங்கைக்கு.

உத். இதத்துக்கத் தைத்துவைதத்திலே பண்ண, அத்துவைதத்திலே பண்ணவேண்டாம் .... என்பதுத்தரம்.

சங். எனக்கு முன்போலப் பசிதாகம் முதலானது காணப்படுகிறது என்கின்ற ..... சங்.

உத். எனக்கு என்கின்ற அகங்காரத்துக்கு அல்லாமல் சாட்சியாயிருக்கின்ற நமக்கு

Dwitam & Adwitham.	Ch. I. The picture lamp.

இலவா என்பதற்கு அதி..........என்பதற்கும்.

சங். அத்தியாசத்தினால் சித்த பேதத்தை
யுங் காண்பிக்கின்றது என்கின்ற.....சங்கைக்கு

உத். இனமுதல் அத்தியாசத்தை விட்டு
ஆத்மா அசங்கநாகிய காரா வேறு கண்டு இ
கு..............................என்பதற்கும்..

சங். அத்தியாச நீக்கத்தில வருகிறது
விவேகம் வரை இல்லை என்கின்ற..... சங்கைக்கு.

உத். அத்தியாசம் போல் விவேகத்தையுந்
திடப்படுத்தினால் வாராதோ.... என்பதற்கும்

சங். துவிதம் மித்தையானதுபோல் அத்து
விதமும் மித்தையாய்ப் போகாதோ, என்கின்
ற..........................சங்கைக்கு. -

உத். இன்னபடியவகும், இன்னபடியல்லாம், எ
ன்று கின்னயப்படாமல், மாயாமயமாய்
இருக்கின்றது, துவிதமோ, அத்துவிதமோ
என்று உன் அனுபவத்தைப் பாரு... என்பதற்கும்

சங். துவிதம்போல் அத்துவிதமும் அநி
த்தியம் என்கின்ற.......... சங்கைக்கு

உத். துவிதம் முன்னில்லை என்கின்றதை
அத்துவிதம் கண்டால்போல், அத்துவிதம் மு
ன்னில்லை என்கின்றதை ஒன்றினாலும் காணப்
படாதபடியினால், அபரோட்சமாகிய அத்
துவிதமே நித்தியம்........ என்பதற்கும்.

	The state of the Gnâni.	Ch. I. The picture lamp
சங்.	இப்படி அறிந்தும் சிலபேர் திருத்தி அ டைந்து சிவ வில் கெட்டு சசந்தேகாவியாமல் இ ருப்பானேன் என்கின்ற ....சங்கைக்கு.	
உத்.	சாவதிர அர்த்தத்தைத் தன்க்கு ஆக்கிக்கொண்டு விசேஷித்து நம்பாமல் மே லெழுந்த புத்தியாலே .... என்றுத்தரம்.	
சங்.	யாதொருக்கால் இருதயத்தில் இருக்கி ன்ற ஆசை எல்லாம் பற்றுவிட்டுப்போகின்றது, அன்றைக்கே இவன் முத்தன், என்று வேதம் சொல் லுகிறது. அப்படி ஞானிகள் இடத்திலே கா மேன் என்கின்றவை .... சங்கைக்கு.	
உத்.	அகங்காரத்தையும் பரமாத்மாவை யும் ஒன்றாய்க் கண்டுவருகின்ற ஆசை ஆகா து என்பது அந்த வேதத்திற்கு அர்த்தம். அக ங்காரக்கிரந்தி விட்டு ஆத்மாவை வேறுகண்டு இருக்கின்றவனுக்கு அகங்காரத்தின் இடமாய்க் கொண்டு ஆசை வந்தாலும் ஹானி இல்லை... என்.உ.	ग्रन्थिः a tie. हानि loss.
சங்.	அகங்காரக்கிரந்தி விட்டவன் அக ங்காரத்தின் இடமாய் ஆசைவரலாமோ என் கிறது .... சங்கைக்கு.	
உத்.	பிராரத்துவ வசத்தினாலே வரும்... என்.உ.	
சங்.	ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்த துவமென்ன சரியானால் இரண்டுபேருக்கும் பேத	

Qu. Tho' the Egotistic-tie is not dissolved, the soul has no mundane existence?

Qu. What is the sign of one who has left the Egotistic bond?

		Ch. I. The picture lamb.
	ம் ஏதென்கின்ற .... சங்கைக்கு.	
உத்.	இவன் வித்துவான் இவன் மூடன்	
	என்கின்றதை வேதபரீட்சையினால் கண்டு	
	போகின்றதே அல்லாமல் சொரூபம் கொண்டு	
	கொண்டபடாதது போல் அகங்காரக்கிரந்	
	தியிட்டுப்போனது கொண்டு ஞானியென்று	
	அறிகின்றதே அல்லாமல் பிராரத்துவசேஷ்டை	
	யினாலே தெரியாது.............. என்பது தாத்பரியம்.	
சங்.	அகங்காரக்கிரந்தி போகாதிருந்தாலும்	
	ஆத்மாவிற்கு சம்சாரம் இல்லை என்கின்ற... சங்.	
உத்.	இப்படி அறிந்த போதே நீயே கிரு	कृतार्थः Successful
	தார்த்தன்.................. என்பது தாத்பரியம்.	
சங்.	அகங்காரக்கிரந்தி விட்டுப்போனவனு	
	க்கு அடையாளம் ஏதென்கின்ற.... சங்கைக்கு.	
உத்.	பிரவிர்த்தி நிவிர்த்திகளிலே தன்னை	प्रवृत्ति activity.
	த் துவேஷிக்கிறது இல்லை, தன்னை இச்சிக்கிறதும்	निवृत्ति Cessation from worldly acts.
	இல்லை என்கின்ற கீதாவசனப்படியே இருப்	द्वेषः Hate.
	பன்.............................. என்பது தாத்பரியம்.	
சங்.	ஆனால் உபேட்சை பண்ணுகின்றதே	उपेक्षा abandon
	ஞானம் என்கின்ற.......... சங்கைக்கு.	
உத்.	கைகால் செத்துப்போனால் கண்மத்	
	தினும் உபேட்சை வரும். இப்படி வியாதியே	
	த்த ..... ஞானம் என்றால் உன்புத்தி	

		Ch I. The picture-lamp.
	அல்லோ ஜெகமிதென்கின்ற ஆசியமேஸ்ரேஷ்ட உபம.	हास्यं laughter.
சிஷ்.	இப்படி ஆசியம் பண்ணத்தக்க வையில லை. சேடபர்தர் முதலான பேர் உபேட்சையாக இருந்தது புராணத்தில் கேட்டோம் என்கி ன்றான் .... சிஷ்யனுக்கு.	
உத்.	வாதிகள் வாகனங்களுடனே கூ டவிளையாடுகிற ஞானி சரீரத்தைத் தா ன் என்று எண்ணுவன் என்று சாம்வேதத்தி ல் சொல்லுகின்றது .... என்றுத்தரம்.	वाहनं vehicle.
சிஷ்.	சேட்பர்தர் காட்டிலப்போனதுஞா னிமித்தம் அல்லவோ என்கின்றான் ... சிஷ்.	
உத்.	அந்த ஞானிகளுடைய சங்கத்தை த் தெரிந்திதே அல்லாமல், மரங்கள் கல்லுகள் போலப்பிரவிர்த்தி அற்றிருக்க அல்ல.. என உத்.	
சிஷ்.	இப்படி ஒருவர் தெருக்களாக ப்பிடித்து இதிலே ஞானம் என்று லோகத் தார் சொல்வானேன் என்கின்றான் ..... சிஷ்.	
உத்.	சாஸ்திர சித்தாந்தம் அறியாத மூடர் தெரிந்து கிடக்க இன்னதைச் சொல்வார் அறிந்தவன் அப்படிச் சொல்லான் ..... என. உத்.	
சிஷ்.	சாஸ்திர சித்தாந்தம் ஏதென் கின்றான் .... சிஷ்யனுக்கு.	
உத்.	சகல சன்மார்க்கிமுங் கூடினவை	

The eight parts of the Yogam are:

1. இயமம் (यमः) Restraint from evil.
2. நியமம் (नियमः) Religious observances.
3. ஆசனம் (आसनं) Sitting in a peculiar posture.
4. பிராணாயாமம் (प्राणायामः) Breathing in a restrained way.
5. பிரத்தியாகாரம் (प्रत्याहारः) Abstraction from all sensations.
6. தாரணை (धारणा). immoveable abstraction.
7. தியானம் (ध्यानं) profound, realizing contemplation.
8. சமாதி (समाधिः) The former, more profound & self-restrained.—

Ch. I.
The picture-lamp.

ராக்கிய, உபரதி, ஞானம் என்று திரிவிதமாக
இருக்கும் இந்த மூன்று வகைக்கும் ஹேது,
சொரூபம், காரியம், அவதி, பலம், என்கின்ற
ஐந்தும் வெவ்வேறு யாருக்கும். இவைகளை
இன்னது இன்னபடி என்று பகுத்து அறி
யாத அவிவேகிகள் எல்லாத்தையும் ஞான
ம் என்று தடுமாறிச் சொல்வார்கள். அதைப்ப
குத்து அறிந்தவன் அப்படிச் சொல்லான். எ-து.

சில. வைராக்கியம் முதலான மூன்று வகைப்
பிறகும் ஹேது முதலான ஐந்து அர்த்தத்தையும் எப்ப
டி என்கின்ற .... [illegible].

25. 1. வைராக்கியத்திற்கு (1)ஹேது விஷய
த்தில் தோஷதிருஷ்டி, (2)சொரூபம் அரோசிகம்,
(3)காரியம் திரும்ப ஆசைவராமல் இருக்கிறது,
(4)அவதி பிரம்மலோக பரியந்தம் துரும்பாய் எண
ணுதல், (5)பலம் பிரம்மலோகம். 2. உபரதிக்கு (1)ஹேது
அஷ்டாங்கயோகம், (2)சொரூபம் சித்தநி
ரோதகம், (3)காரியம் விவகாரத்தியாகம் (4)அவதி
சுழுத்தியைப்போல் சரீரத்தை மறந்தல்,
(5)பலம் பிரம்மலோகம். 3. ஞானத்திற்கு (1)ஹேது
சிரவணம், மனனம், நிதித்தியாசனம், (2)சொ
ரூபம் சத்து அசத்து [illegible], (3)காரியம் அ

वैराग्य absence of worldly desires.
उपरति abstaining from prescribed acts.
हेतु Cause.
स्वरूप Nature.
कार्य Business, effect
अवधि limit or conclusion.
फल fruit.
दोष: fault.
अरोचक: loss of appetite.
ब्रह्मलोक:
अष्टाङ्ग consisting of 8 parts.
श्रवण hearing.
मनन minding.
निरुक्त: Vedanga
आसन sitting.

Ch. I. — The picture-lamp.

கங்காரூக்கொண்டு, திரும்பி வராமல் இருக்கின்
றது, (4) அவற்றின் ஏகமே தான் என்று கின்
றல்போல பிரமமே தான் என்கின்ற திடம்
(5) பலம் மோட்சம் .... என்றுத்தரம்

சங். இந்த மூன்றும் ஏகபிக்கவேண்டா
மோ, என்கின்றது .... சங்கைக்கு.

உத். இந்த மூன்றும் கூடினால் தான் சவுக்
கியம் உண்டு என்கின்றதே அல்லாமல் மோட்
சத்திற்கு ஞானம் மாத்திரமே போதும். கன்ம
வசத்தினால் சிலபேர் இடத்தில் கூடியதாகு
ம். சிலபேர் இடத்தில் பிரிந்திருக்கும் கல்வக
த்தேவையல்ல .... என்றுத்தரம்

சங். இப்படிக் கல்லாமல் கிலை கின்றவ
னுக்குச் செய்காரிய ஏதென்கின்ற.... சங்கைக்கு

உத். சின்மாத்திரமாயிருக்கின்ற தன்னி
டத்திலே மாயை தோபித்த செகசித்திரத்தை
உபேட்சித்து சதாகாலமும் சின்மாத்திரமாக
வே காண்பன். இந்தச் சித்திர தீபிகையை அ — अनुसंधाने Investigation
னுசந்தானம் பண்ணிவருகின்றவன் செகத்தை — The scope of the whole chapter.
சித்திரமாகவே காண்பன் அல்லாமல் முன்
போல் உண்மை என்று மயங்கான்.

முதலாவது சித்திர தீபம்

முற்றும்.

The subject of the Chapter, which is the satisfaction of the man who while alive is released from future births | Ch. II. The lamp of Contentment

இரண்டாவது
திருப்தி தீபம்.

சகலலோகங்கட்கும் சகலவேதார்த்த
த்தையும் வெளியிடுகின்றதும் புருஷார்த்த
த்தைப்பூரிட்ட வித்தியாரண்ணிய சுவா
மிகளுக்கு நமஸ்காரம். புருஷனானவன் ஆத்
மாவை இவனேதான் என்று அறிந்தால் பின்பு
ஆருக்கெப் போக இச்சித்தியமாய எந்தப்பேர
க்கத்தை வேண்டிச் சரீரதாபப் படுவன் என்
கின்ற பிரகாரண்ணிய உபநிஷத்த அ
சந். ர்த்தம் சொல்லுகிறேன். இந்த உபநிஷத்து | उपनिषद् The theological portion of the Vedas.
என்னத்தை சொல்லுகின்றதெனகிறோ... சந்.
உத். சித்திரதீபிகையிலே சொன்னபடி
செகத்துமித்தை என்றும், உண்மையான சி
ன்மாத்திரமே தான் என்றும் தெரிப்பட்ட
ஜீவன் முக்தனுடைய திருப்தியை சொல்லு
கின்றது.............................. என்றுத்தரம்.
சங். இந்த வேதத்திலே புருஷனானவன் | पुरुषः
என்கின்ற சொல்லுக்கு அர்த்தம் ஏதென்
கின்ற.............................. சங்கைக்கு.

Ch. II.	Purush	The lamp of Contentment.
௨௯.	சொரூபத்திலே சித்ஜடத்தவிசேஷ பொருள் இல்லாவிட்டாலும், விவகாரத்திலே ~~[illegible]~~ மாயாதீதமாகச் சீவிசுரர்களென்று இரண்டுபேர் உண்டு; இவரில் சிவஉடைய முதலானவையைப் பற்றுகின்றவர் ஈசுரன். சாக்கிர முதல் மோட்சபரியந்தம் உள்ளசமசாரம் அநுபவிக்கிறவன் சீவன். இதின் அதிஷ்டானசைதன்னியத்துடனே கூட்டிச்சீவனிப்புருஷன் என்று சொல்லுகிறது ந...ன.௨௯.	
௩௰.	அதிகாரியைச் சொல்லுகின்ற புருஷதத்துவத்திற்கு அதிஷ்டானத்தையும் கூட்டி அர்த்தம் ஆக்கலாமோ என்கின்ற...௩௰.	
௨௯.	அதிஷ்டானத்தைத் தவிர ஆரோபத்திற்கு வேறுசொரூபம் இல்லாதபடியினேயும், விவகாரத்தில் இருவரும் ஒருவராய்த் தோற்றுகையினாலும், முத்தியிலே ஆரோபமும் அதிஷ்டானமாத்திரமாய்ப் போகின்றபடியினாலும், இரண்டையுங் கூட்டிச்சொன்னோம்.................. என்பதற்கு.	
௩௰.	இந்தப்புருஷன் அதிஷ்டானப்பிரதானமாய் எப்படிப் பேசுவான்? ஆரோபப்பிரதானமாய் எப்படிப்பேசுவான்? என்கின்ற.................. சங்கைக்கு.	प्रधाने Natural State principal.
௨௯.	அதிஷ்டானம் ஆரோபத்திலே அ	

Ch II

In. Both the Wise and the unwise are சித்தாபாசர் reflections of Chit. Of these how can the wise say regarding the witness who is foreign to himself – it is [illegible] ?

Ch II. The lamp of Contentment.

டவகியிருக்கும் காலம் ஒருமைப்பாடாக "நா
ன் சம்சாரி" என்று பேசுவான் ஆரோபத்தைத்
தீர்க்கின்ற அதிஷ்டானமே தானாய்க் காணும்
போது "நான் அசங்கன், சின்மாத்திரன்" என
று பேசுவன் .... என்றுத்தரம்.

சங. நான் அசங்கன் என்கின்ற போது
அசங்கன் இடத்திலே அகங்காரம் கிடையாமே
என்கின்ற .... சங்கைக்கு.

25. முக்கிய அகங்காரம் இரண்டும்
அமுக்கிய அகங்காரம் ஒன்றும் ஆக அ
கங்காரம் மூன்று உண்டு. (1) அதிஷ்டான அக
ங்காரங்களைப் பகுத்துக் காணாத மூடர் ஒருமை
ப்பாடாக "நான் வந்தேன், போனேன்," என்று சி
தாபாசனைப் பேசுகின்றது, அமுக்கிய அகங்
காரம், (2) முக்கிய அகங்காரம், இரண்டையும்
லக்ஷணை விருத்தியிலே பகுத்துக் கண்டு ஞா
னி "நான் அசங்கன், சின்மாத்திரன்" என்று பே
சுகின்றது, முக்கிய அகங்காரம். (3) விவகாரத்தி
லே "நான் வந்தேன், போனேன்" என்று சிதாபாச
னைப் பேசுகின்றது, ஆகாத அமுக்கிய அ
கங்காரம் .... என்றுத்தரம்.

சங. அஞ்ஞானி, ஞானி என்று இருக்கி
ன்ற இருவரும் சிதாபாசர் அல்லவோ? அ

Ans. In the reflection of the face, the face reflected in the glass is not the natural one. That which beholds it is the natural one. So to the _Chitabhasan_, since he is false, and that which remains as the _witness_ is the Natural one, he may say of the Natural-supreme spirit - "it is I". —

In.

Ch. II. | The lamp of contentment.

வாகனில் ஞானிதனக்கு அந்நியமாயிருக்கின்ற
சாட்சியை "நான்" என்னக்கூடுமோ, என்கின்ற... சங்.
2ந. முகாபாசத்திற்கு எப்படியானால், க
ண்ணாடியில் பிரதிபலிக்கின்ற முகமே சுபாவம்.
அல்ல, அதைப்பார்க்கின்ற முகமே சுபாவம்; அதை
ப்போலச்சிதாபாசனுக்கும் நான் மித்தை ஆன
படியினாலும், சாட்சியாயிருக்கின்ற நான் சு
பாவம் ஆனபடியினாலும், தன்னுடைய சுபாவ
தைதன்னியத்தை "நான்" என்னக்கூடும்... ஏ. 2ந.
சங். சிதாபாசனாயிருக்கின்ற சிதாபாசன்
மித்தை ஆனால் அவன் அனுசந்தானம்பண்
ணுகின்ற ஞானமும் மித்தை ஆகவேணும்; அது
சம்சாரத்தைப் போக்கவும் மாட்டாது என்கி
ன்ற .... சங்கைக்கு.
2ந. இந்த ஞானம் மித்தை ஆனாலும்
இதனை சிதாபாசனுக்கு முன் இருந்த சம்
சாரம் பொய்யான படியினால் அதைப்போ
க்குகிறதற்கு இந்த ஞானமே போதும்.... ஏ. 2ந.
சங். 42-ச்சுலோகத்திற்கு அர்த்தம் கேட்
டோம். இனி ஆத்மாவை இவரோ நான் என்று
அறிகின்றது எப்படி என்கின்ற.... சங்கைக்கு.
2ந. சந்தேக விபரீத அர்த்த நேககமே | सन्देहः doubt. विपरीत Contrary.
நான் என்று இருந்தாய்ப் போலச்சாட்சியே தா